



தேனி வடக்கு மாவட்டம் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் வைகை ஸ்கேன் டி. பாண்டியராஜன் ஏற்பாட்டில் பெரியகுளம் திரவியம் கலை அறிவியல் கல்லூரி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவாக இலவச பிசியோதெரபி மையம் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.



விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு. கழகம் சார்பில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மீண்டும் கழக ஆட்சி அமைத்திட மேற்கொள்ள வேண்டிய களப்பணிகள் குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு, வழக்கறிஞர் அசோக் ஆகியோர் எடுத்துரைத்தனர். உடன் ஏ.ஆர். ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ., பொன்னுத்தம்பி, சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், உதயசூரியன், எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், காரியாபட்டி செந்தில், காளிராஜன், தங்கத் தமிழ்வாணன், மந்திரி ஓடை கண்ணன், சந்தானப்பாண்டியன், செல்வம், விவேகன்ராஜ், மாவட்ட தலைவர் தங்கராஜ், டாக்டர் செண்பக விநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தேனி வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் வைகை ஸ்கேன் டி.பாண்டியராஜன் ஏற்பாட்டில்

# பெரியகுளத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு இலவச பிசியோதெரபி மருத்துவமனை!

## அமைச்சர் ஐ.பெரியசாமி – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்தனர்!

தேனி, நவ, 4, -

பெரியகுளம் அருகே கைலாசப் பட்டியில் பெரியகுளம் திரவியம் கலை அறிவியல் கல்லூரி உள்பட கல்வி நிறுவனங்களின் சார்பில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், செவிலியர் பயிற்சி கல்லூரி உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. தேனி பெரியகுளம் சாலையில் உள்ள இக்கல்வி நிறுவனங்களின் வளாகத்தில் திரவியம் கல்விக் குழுமங்களின் தாளாளரும், தேனி வைகை ஸ்கேன் உரிமையாளரும், தேனி வடக்கு மாவட்ட திமுக மருத்துவர் அணி அமைப்பாளருமான டாக்டர் டி.பாண்டியராஜ், முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நினைவு இலவச பிசியோதெரபி மருத்துவமனையை அமைத்துள்ளார்.

இப்பிசியோதெரபி மருத்துவமனையை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர். எஸ் பாரதி ஆகியோர் திறந்து வைத்து வாழ்த்தி பேசினர்.

விழாவில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தி.மு.க உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல்.மூக்கையா, சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் பெரியகுளம் முத்துராமலிங்கம் போடி நேரு பாண்டியன் தேனி வடக்கு மாவட்ட தி.மு.க அவைத்தலைவர் செல்ல பாண்டியன் முன்னிலை வகித்தனர்.

திரவியம் கல்விக் குழுமங்களின் தாளாளரும் இலவச பிசியோதெரபி மருத்துவமனையின் நிர்வாக இயக்குனருமான வைகை ஸ்கேன் டாக்டர் டி. பாண்டியராஜ் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இவ்விழாவில், பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன் பாண்டியன் சக்கரவர்த்தி. அய்யப்பன், தேனி தெற்கு நகர செயலாளர் நாராயண பாண்டியன்,போடி நகர செயலாளர் புருஷோத்தமன் தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர் முருகன் பொதுக்குழு உறுப்பினர்கள் சங்கர், முருகேசன், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டை அமைப்பாளர் ராஜசேகர். வடக்கு மாவட்ட ஐலசாணி அமைப்பாளர் ராஜன உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவின் போது ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

முன்னாள் தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் ராமதாஸ் நன்றி கூறினார்.

### ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. தலைமை!

# மாவட்டப் பிரதிநிதி ஆற்காடு சிவா இல்ல மணவிழா!

## அமைச்சர் ஆர்.காந்தி - கமலா காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துரை!

ஆற்காடு, நவ.4–

இராணிப்பேட்டை மாவட்டம், மாவட்டப் பிரதிநிதி ஆற்காடு சிவா (எ) ராஜ்குமார் – ஜெயந்தி ஆகியோரின் புதல்வர் ஆர். காமேஷ்வரனுக்கும் இராணிப் பேட்டை மாவட்டம், ஆற்காடு, நினைவில் வாழும் பி.கருணா – கே.செல்வி ஆகியோரின் புதல்வி கே.ஹரிணிக்கும் மணவிழா 10.11.2025 திங்கள் காலை 6 மணியளவில் ஆற்காடு – ஆரணி ரோடு, விலாரி கூட் ரோடு, கே.பி.ஜெ. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

நகரச் செயலாளர் ஏ.வி.சரவணன் வரவேற்புரையாற்றுகிறார்.

வினோத் காந்தி, ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஏ.வி.சாரதி, பொன். ராஜசேகர் உள்ளிட்ட கழகத்தினர் பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமணத்தை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர். காந்தி, திருமதி கமலா காந்தி, ஆகியோர் நடத்தி வைத்து வாழ்த்துகின்றனர்.

இதில் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தி.அ.முகமது சகி, க.சுந்தர் எம்.எல்.ஏ., நல்லதம்பி எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி., பி.என்.பி.இன்பசேகரன், ஜெ.லட்சுமணன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க.

# சிறப்பு வாக்காளர் திருத்த (SIR) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!



நெல்லை.நவ.4–

நெல்லைமேற்குமாவட்டதி.மு.க. சிறப்பு வாக்காளர் திருத்த (SIR) ஆலோசனை கூட்டம் நாளை (05.11.2025) அன்று அம்பாசமுத்திரம், ஆலங்குளம் சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெற உள்ளது.

இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும்.என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிடமாடல்முதலமைச்சர்கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்கள் அறிவுறுத்தலின்படி, நாளை(05.11.2025)காலை 09.30 மணிக்கு ஆலங்குளம், ஏ.ஜெ. திருமண மண்டபத்தில் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (BLA2) மற்றும் (BDA) கூட்டமும்,

அதனைத் தொடர்ந்து அன்று (05–11–2025) பகல் 11 மணி அளவில் கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி திருமண மண்டபத்தில் அம்பாசமுத்திரம் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட(BLA–2,)(BDA)கூட்டமும்,எனது தலைமையில், (நெல்லை மேற்கு மாவட்டபொறுப்பாளர்இரா.ஆவுடையப்பன்) கழகசட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன்,சட்டத்துறைதுணைசெயலாளர் எஸ்.ராஜாமுகம்மது,தலைமைகழக வழக்கறிஞர்எஸ்.எஸ்.மனோஜ்ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

2026 தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றி பெற்று,திராவிட மாடல் ஆட்சிதொடரும்வகையில்நடைபெற உள்ள மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டங்களில், அம்பாசமுத்திரம்,ஆலங்குளம், ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட, தொகுதிபார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,மாநில அணி நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர்கழகச்செயலாளர்கள்(BLA–2,)(BDA)நிர்வாகிகள் மற்றும் கழக மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், DLC,CLC,ULC,TLC,உள்ளிட்டகழக வழக்கறிஞர்கள்பங்குபெறும்சிறப்பு வாக்காளர் திருத்தம் தொடர்பான (SIR) ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாமல கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைபடியும் மாவட்ட கழகப் பொறுப்பாளர் கௌதம சிகாமணியின் வழிகாட்டலில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சோழாம்பூண்டி ஊராட்சி நியாயவிலை கடையினை சட்ட மன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, ஆர்.முருகன், மாவட்ட பிரதிநிதி ஆவின் தண்டபாணி,ஆறுசங்கர், சதீஷ், அசோக்சதாசிவம், கற்பகவல்லி, வைத்தியநாதன், சீனிவாசன், நாராயணன், சக்கரவர்த்தி, கருணாகரன், சாரதி மற்றும் மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ‘நம்ம ஸ்கூல் - நம்ம ஊருப் பள்ளித் திட்டத்திற்கு’ நன்கொடை வசூலிக்கப்படுகிறதா?

## தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை திட்டவட்டமாக மறுப்பு!

சென்னை, நவ.4-

“நம்ம ஸ்கூல் நம்ம ஊருப் பள்ளி” திட்டத்தின் வாயிலாக நன்கொடைகளை வசூலிக்க பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகளும் ஆசிரியர்களும் வற்புறுத்தப்படுவதாக முன் வைக்கப்பட்டுள்ள எவ்வித அடிப்படையுமற்றக் குற்றச்சாட்டுகளை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை திட்டவட்டமாக மறுக்கிறது.

இதுகுறித்த செய்திக் குறிப்பு வருமாறு:-

சமூகப் பங்களிப்பு மற்றம் நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிதியின் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நம்ம ஸ்கூல் நம்ம ஊருப் பள்ளித் திட்டத்தின் அடிப்படை நோக்கம் மற்றும் செயல்பாட்டையே இக் குற்றச்சாட்டுகள் சிதைக்கின்றன.

நம்ம ஸ்கூல் நம்ம ஊருப் பள்ளி (NSNOP), நிறுவனங்கள் சட்டம் பிரிவு 8இன் கீழ் (இலாப நோக்கமின்றி அறிவியல், கலை, கல்வி, சமூக நலன் போன்றத் துறைகளில் செயல்படும் நிறுவனங்கள்) தமிழ்நாட்டு அரசினால் பதிவு செய்யப்பட்ட நிறுவன மாகும். தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகளின் கல்விச் சூழலையும் கட்டமைப்புகளையும் மேம்படுத்த தன்னார்வ பங்களிப்புகள் மற்றும் நிறுவன சமூகப் பொறுப்பு நிதியளிப்புகள் ஆகியவற்றை முறைப் படுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனம் உருவாக்கப் பட்டது. தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறைக் கொண்டு பங்களிக்க விரும்பும் தொழில் நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரின் மீதே இத்திட்டத்தின் முழுக் கவனமும் பதிந்துள்ளது.

முக்கியமாக, எந்த ஒரு அரசு அலுவலரோ, தலைமை ஆசிரியரோ, ஆசிரியரோ எவ்வித நிதியையும் பெற நியமிக்கப் படவோ அதிகாரமளிக்கப் படவோ இல்லை. மாறாக, பள்ளி மேலாண்மைக் குழுவுடன் கலந்தாலோசித்து தங்கள் பள்ளியின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை பள்ளிக் கல்வித் துறையின் பெற்றோர் செயலியில் (TNSED Parent App) பதிவிடும் நிர்வாகப் பணியினைச் செய்வது மட்டுமே அவர்களின் பங்காக இருக்கிறது. அவ்வாறுப் பதிவிடப்பட்டத் தேவைகள், NSNOP தளத்தின் ஊடாக தன்னார்வத்துடன் அளிக்கப்பட்டுள்ள பங்களிப்புகளின் மூலம் தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

NSNOP தளத்தில் பதியப்படும் பங்களிப்புகள் ஒவ்வொன்றுமே தன்னார்வத்துடன் பதியப்பட்டதாகவும் வெளிப்படைத் தன்மைக் கொண்டதாகவும், பள்ளிகளின் தேவைகளான ஸ்மார்ட் வகுப்பறைகள், மற்றும் ஹைடெக் லாப்கள், சுகாதார வசதிகள் மற்றும் வகுப்பறை சீரமைத்தல் போன்றவற்றை நிறைவேற்றவே பயன்படுத்தப்படுவதாகவும் உள்ளன. இத்தளத்தில் பதிவு செய்துள்ள பல நன்கொடையாளர்கள் தாமே நேரடியாக குறிப்பிட்டப் பள்ளிக்கு செயல்முறையில் பங்களிக்கவும் முன் வருகின்றனர். இதன் மூலம் இந்த பங்களிப்பின் நம்பகத் தன்மையும் வீச்சும் அதிகரிக்கின்றது. இத்திட்டத்துடன் தொடர்புடைய நிதி இலக்குகளோ, காலக்கெடுகளோ, நிதித்திரட்டல் ஒதுக்கீடுகளோ எந்த அதிகாரிக்கும் அல்லது நிறுவனத்திற்கும் நிர்ணயிக்கப்படவில்லை.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இது வரை, 885 நிறுவனங்கள் (தொழில்துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்டவை) மற்றும் 1,500க்கும் மேற்பட்ட தனி நபர்கள் - இவர்களில் பலர் தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் பெருமைமிக்க முன்னாள் மாணவர்களாகும் - தன்னார்வத்துடன் சுமார் 860 கோடி ரூபாயை பள்ளிகளின் மேம்பாட்டிற்காக வழங்கியுள்ளனர். 200க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்கள் ஆண்டு தோறும் தொடர்ந்து இந்தத் திட்டத்துக்கு ஆதரவு அளித்து வருவது என்பது, இத்திட்டத்தின் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை மீது ஏற்பட்டுள்ள சமூக நம்பிக்கையின் உறுதியான சான்றாகும்.

பள்ளிக் கல்வித் துறைக்கான அரசு நிதி ஒதுக்கீடு போதுமான அளவு இல்லை என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு மாறாக, கடந்த நான்கு ஆண்டுகளில் பள்ளிக் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 43.5% உயர்ந்துள்ளது - 2021-22 ஆம் ஆண்டில் 32,599.54 கோடியாக இருந்தது, 2025-26 ஆம் ஆண்டில் 46,767 கோடியாக உயர்ந்துள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு மற்றும் சமூகப் பங்களிப்பின் ஊடான வளர்ச்சி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் அரசுப் பள்ளிகளை வலுப்படுத்துவதில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இது காட்டுகிறது.

‘நம்ம ஸ்கூல் நம்ம ஊருப் பள்ளி’ திட்டம் என்பது அரசின் நிதி ஒதுக்கீட்டுக்கு மாற்று அல்ல. மாறாக, சமூகங்களையும், நிறுவனங்களையும் முன்னாள் மாணவர்களையும் அவர்கள் அக்கறைக் கொண்டுள்ள பள்ளிகளுடன் இணைக்கும் பாலமாக செயல்படும் ஒரு கூட்டு முயற்சிக்கான முன்மாதிரித் திட்டமாகும். இது அழுத்தத்தின் அடையாளம் அல்ல, இணைப்பின் சின்னம்; சுரண்டலின் குறியீடு அல்ல, அதிகாரப்படுத்துதலின் வெளிப்பாடு ஆகும்.

இத்திட்டம் அடையாளப்படுத்தும் கூட்டு பொறுப்புணர்வு மற்றும் வளர்ச்சியை சிதைக்கும் வகையில் பரப்பப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளினை ஒதுக்கி, உறுதி செய்யப்பட்ட மற்றும் நம்பகமான தகவல்களை மட்டுமே நம்புமாறு இத்திட்டத்தின் அனைத்துப் பங்கேற்பாளர்கள் மற்றும் பொதுமக்களையும் பள்ளிக் கல்வித் துறை உறுதியாகக் கேட்டுக்கொள்கிறது.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) - பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம்!

## நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



நெல்லை.நவ.4-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம் நாளை (05 11 2025) திருநெல்வேலி, பாளையங் கோட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடைபெறுகிறது. என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர்,நமது நெஞ்சம் நிறைந்த கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க...

துணை முதலமைச்சர், இளைஞர்களின் எழுஞாயிறு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்,நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர்,கழக முதன்மைச் செயலாளர்,கே.என். நேரு கழக துணை பொதுச் செயலாளர், கழக பாராளுமன்ற குழு தலைவர், மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.ஆகியோரின் ஆலோசனையின் படி,நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிக்கு (BLA 2,)(BDA) ஆகியோர்களுக்கு,”என் வாக்குச்சாவடி,வெற்றிவாக்குச்சாவடி” சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) பற்றிய ஆலோசனை கூட்டம், நாளை (05.11.2025 புதன் கிழமை), மாலை 4.00 மணிக்கு,திருநெல்வேலி சட்டமன்ற தொகுதிக்கு மானூர் ஒன்றியம், கானார்பட்டியிலுள்ள ஏ.ஆர். மஹால் திருமண மண்டபத்திலும்,மாலை 6.00 மணிக்கு, பாளையங் கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு, பாளையங் கோட்டை வ.உ.சி. விளையாட்டு மைதானம் பின்புறம் அமையப் பெற்றுள்ள பி.பி.எல். திருமண மண்டபத்திலும், எனது தலைமையில் (நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.) நடைபெறுகிறது.

இக்கூட்டங்களில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவி சந்திரன்,கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் நவீன் ஆகியோர்கள் கலந்துக் கொண்டு சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR) குறித்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

ஆகவே நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், வட்ட, கிளைக்,கழக செயலாளர்கள், அனைத்து வாக்குச்சாவடிகளின் BLA.2,BDA மற்றும் கழக வழக்கறிஞர்கள்,DLC, CLC, ULC, TLC அனைவரும் இந்த சிறப்பு வாக்காளர் திருத்தம் தொடர்பான ஆலோசனை கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தெற்காசிய அளவிலான 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு வெள்ளிப்பதக்கம் வென்றுள்ள பரமக்குடி 30ஆவது வார்டு சுந்தர்ராஜபட்டினத்தைச் சேர்ந்த மாணவன் சரண் மேகவர்ணத்தை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தார். உடன் சேது கருணாநிதி, ஜெயக்குமார், மாரியம்மாள் மும்மூர்த்தி, நெடுமாறன் ஆகியோர் பாராட்டி வாழ்த்தினர்.